## தலைப்பு 176 – துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அலுவல்கள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2016 ஆம் ஆண்டு

தலைப்பு 176 - துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அலுவல்கள் அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள் பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 யூன் 21 ஆந் திகதி அமைச்சின் செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான போதியளவான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 2 கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்

அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 1,945.17 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 1,231.86 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 713.31 மில்லியன் அதாவது 36.67 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 197.40 | 179.06 | 18.34 | 9.29 |
| மூலதனம் | 1,747.77 | 1,052.80 | 694.97 | 39.76 |
| மொத்தம் | **1,945.17** | **1,231.86** | **713.31** | **36.67** |

## 2.2 முற்பணக் கணக்கு

### அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

அமைச்சிற்குரிய 17601 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதிகூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | அதிகூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 4.00 | 3.98 | 2.90 | 4.18 | 20.00 | 12.36 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

அமைசிற்குரிய 7002/0000/00/0115/0016/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 12,790 மில்லியனாக காணப்பட்டது.

## 2.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அலுவல்கள் அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்படத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில்

உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு முரண்கள்**

மீளாய்வாண்டின் போது 05 செலவின விடயங்களுக்காக குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீட்டின் கீழ் நிதியேற்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், நிதியேற்பாடு பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீட்டின் மூலம் பெற்றுக்கொண்டிருந்த நிதியேற்பாட்டில் 11 சதவீதம் முதல் 71 சதவீதம் வரையான வீச்சிலான அளவினைக் கொண்டிருந்தன.

### 3.2 கட்டுநிதிக் கணக்கு

அமைச்சினால் 2017 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்படாதிருந்த கட்டுநிதிக் கணக்குகளிலான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 8,800 ஆக இருந்தது. வேலை இடைநிறுத்தத்திற்கு உட்பட்ட உத்தியோகத்தரொருவரால் தீர்க்கப்பட வேண்டிய அம்மீதி வருடக் கணக்காக தீர்வு செய்யப்படாமல் முன்கொண்டு வரப்பட்டு காணப்பட்டது.

### 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

விடய இலக்கம் 17601 கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்று தொடர்பில் மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் புத்தகங்களின் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் மீதி மற்றும் திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் காண்பிக்கப்பட்ட மீதிகளுக்கு இடையே ரூபா 80,823 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) தனியால் மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகை மற்றும் திறைசேரி புத்தகங்களில் காண்பிக்கப்படும் இறுதி மீதிகளுக்கிடையே ரூபா 280,983 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(இ) கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாயிருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,445,803 ஆக இருந்ததுடன், அந்த நிலுவை மீதிகளில் சில மீதிகள் 13 வருடங்கள் முதல் 27 வருடங்கள் வரையான காலமாக நிலவி வந்த போதிலும், அந்நிலுவைக் கடன் மீதிகளை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

## 3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 3.4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

அமைச்சினால் 2016 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட கட்டுநிதி தேவைப்பாட்டுத் திட்டம் மற்றும் வருடாந்த பெறுகைத் திட்டம் என்பன உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு வருடாந்த பாதீட்டின் மூலம் ரூபா 24.6 மில்லியன் நிதிஏற்பாடு பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதியேற்பாட்டினைப் பயன்படுத்துவதற்காக கொள்வனவுச் செயற்பாட்டின் வெவ்வேறு கட்டங்கள் மற்றும் காலப்பகுதி குறிப்பிடப்பட்டு அர்த்தமுள்ள பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4.3 உள்ளகக் கணக்காய்வு

அமைச்சினால் 2015 யூலை 06 ஆந் திகதி உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று உருவாக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக தலைமை உள்ளகக் கணக்காய்வாளர் தவிர மேலும் ஒரு உத்தியோகத்தர் மாத்திரம் இணைக்கப்பட்டிருந்தார்.

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சினால் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

திடீர் விபத்துக்குட்பட்ட அமைச்சிற்குரிய ரூபா 11,340,000 பெறுமதியான இரண்டு மோட்டார் வாகனங்களின் திருத்த வேலைகளுக்காக 11 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கராஜ் ஒன்றில் விளைவற்றுக் காணப்பட்டன.

### (ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் காலப்பகுதிக்குரிய வருடாந்த பொருள் மெய்மையாய்வின நடாத்துவது தொடர்பாக சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருந்த பல சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

- பொது 47 அறிக்கையின் பிரகாரம் இனங்காணப்பட்ட பயன்பாட்டிற்கு எடுக்கப்பட முடியாத பொருட்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படாமை
- கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் கைதவிர்க்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பான தகவல் அறிக்கை அரச நிதிப் பணிப்பாளருக்கு சமர்ப்பிக்கப்படாமை.

(ii) 2016 ஆம் அண்டிற்குரிய கணிப்பீட்டு அறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட மிகைகள் மற்றும் ஏனைய பரிந்துரைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 757(2) மற்றும் (3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) வருடாந்த பொருள் மெய்மையாய்வு சபை பரிந்துரைகள், காலரீதியாக செயற்படுத்தப்படாததன் காரணமாக 2017 மார்ச் 30 ஆந் திகதி வரையிலும் உடைந்த பொருட்கள் பாரியளவில் அமைச்சின் கட்டிட வளவில் கீழ்மாடியில் களஞ்சியத்தில் காணப்பட்டன.

**3.6 வெளிநாட்டுச் செயற்திட்டங்கள்**

மீளாய்வாண்டின் போது அமைச்சினால் வெளிநாட்டுக் கடன் நிதியீட்டத்தின் கீழ் காலி துறைமுக அபிவிருத்தி செயற்திட்டதத்தை செயற்படுத்துவதற்காக ரூபா 500 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இச்செயற்திட்டத்திற்காக தேவையான நிதியேற்பாட்டை மேற்கொள்வதற்கு முன்னர் அச்செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு தேவைப்படக்கூடிய தீர்வைகள் இணக்கப்பாடுகள் என்பவற்றை உலக மரபுரிமை பாதுகாப்பு வேலைத்திட்டத்தின் கீழ் யுனஸ்கோ நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு தவறியதன் காரணமாக செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தது.

**3.7 செயலாற்றல்**

2016 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி அமைச்சின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

**(அ) நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

அமைச்சிற்குரிய விடயப் பரப்பில் காண்பிக்கப்படும் 2015 திசெம்பர் 21 ஆந் திகதிய 1933/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரத்தின் பிரகாரம் கையளிக்கப்பட்டிருந்த கடமைகள் மற்றும் செயற்பாடுகளில் பின்வரும் பிரதான செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(i) பூன் கப்பல்கள் மற்றும் புக்காவேஸ மீதிகளை கையேற்றல்
(ii) கரையோர பயணிகள் போக்குவரத்து சேவைகளை நடாத்துதல் தொடர்பான செயற்பாடுகள்
(iii) கப்பல் அபிவிருத்தி நிதியத்திற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 422.64 மில்லியனான கடன் மீதியை அறவீடு செய்யப்படாமை
(iv) காலி துறைமுக அபிவிருத்தி செயற்திட்டத்தை செயற்பாட்டிற்கு கொண்டு வர முடியாமை.

**(அ) திட்டமிடல்**

2014 பெப்வரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(i) சர்வதேச சமுத்திர அமைப்பின் நியதிகளின் பிரகாரம் உள்நாட்டு சட்ட தயாரிப்பதற்கான சட்ட வரைவு 2016 யூன் 30 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்ற அங்கீகாரத்திற்கு வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) சர்வதேச சமுத்திர அமைப்பின் நியதிகளுக்கு இணங்க சட்டங்கள், விதிகள் மற்றும் வழிகாட்டல்கள் என்பவற்றை தயாரிப்பதற்காக சட்ட வரைவு அங்கீகரிப்பதற்கும் வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**3.8 நட்டங்களும் சேதங்களும்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் 20 மோட்டார் வாகன விபத்துக்கள் காரணமாக ரூபா 4.28 மில்லியன் சேதங்கள் அறிக்கையிடப்பட்டிருந்தன. அதில் 04 சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட ரூபா 246,967 ஆன நட்டங்கள் நட்டக் காப்புறுதியின் மூலம் நட்டக்காப்புறுதி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அமைச்சிற்குரிய ஜீப் வண்டிக்கு 2015 ஆம் ஆண்டில் இடம்பெற்ற விபத்தினால் காப்புறுதியால் மேவுகை செய்யப்படாத ரூபா 481,550 ஆன நட்டத்தை உரிய தரப்பினரிடமிருந்து 2017 யூன் 12 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3.9 மனித வளங்கள் முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை- | | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| | | நிரந்தர | அமைய | நிரந்தரம் | அமைய / ஒப்பந்தம் | |
| (i) | சிரேஷ்ட நிலை | 39 | - | 20 | 02 | 17 |
| (ii) | மூன்றாம் நிலை | 06 | - | 02 | - | 04 |
| (iii) | இரண்டாம் நிலை | 85 | - | 43 | 01 | 41 |
| (iv) | ஆரம்ப நிலை | 55 | 02 | 23 | 04 | 30 |
| | மொத்தம் | **185** | **02** | **88** | **07** | **92** |